DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:185/2022 Deposition of Witness for : P.W.4**

| | | | |
|---|---|---|---|
| Name | : நந்தகோபால் | Calling | |
| Father's Name | : | Taluk | |
| Age | : | District | |
| Village | : | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 16-02-2026

முதல் விசாரணை

1. நான் தற்போது பெரியகுமாரபாளையம் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். சம்பவம் நடந்தபோது நான் அலங்கியம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன். 18.08.2021 ம் தேதி இரவு சுமார் 8.30 மணிக்கு தாராபுரம் காவல் ஆய்வாளர் என அழைத்து கொலை வழக்கு தொடர்பாக விசாரணை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் நான் அவருடன் இருக்க வேண்டும் என்று சொன்னார். தாராபுரம் உடுமலைப்பேட்டை சாலையில் விவேகம் பள்ளிக்கு எதிராக நடைபெற்ற கொலை வழக்கு தொடர்பாக விசாரிக்க வேண்டும் என்று சொன்னார். என்னை அலங்கியத்திலிருந்து பழனி செல்லும் சாலையில் கொங்கூர் பிரிவு அருகில் என்னை வரச் சொன்னார். நான் அங்கு சென்றபோது அங்கு காவல் ஆய்வாளர், காவலர்கள் மற்றும் சாட்சி அரவிந்த் குமார் இருந்தார் மேலும் மனோஜ் என்கிற மனோஜ் குமார் என்பவரும் இருந்தார். எதிரி செல்வம் என்கிற திருவளர்செல்வம், இளஞ்சிரார் விமல்குமார் ஆகியோர் இருந்தார்கள். ( சாட்சி ஆஜர் எதிரிகளை பார்வையிட்டு அவர்கள் யாரும் அங்கு இல்லை என்று சொன்னார் எதிரி மனோஜ் என்கிற மனோஜ்குமார் நீதிமன்ற காவலில் இருந்தார் அவர் நேரடியாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவில்லை)

2. மனோஜ் என்கிற மனோஜ் குமார் என்பவர் காவல் ஆய்வாளரிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தார். சம்பவ இடத்திற்கு தன்னை அழைத்துச் சென்றால் கொலைக்கு பயன்படுத்திய வாகனம் மற்றும் அவருடைய செல்போனையும் எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். பின்னிட்டு செல்வம் என்கிற திருவளர்ச்செல்வம் ஆய்வாளரிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தார். அவர் கொலைக்கு பயன்படுத்திய வாகனம் மற்றும் அவரது செல்போனை ஆய்வாளரிடம் ஒப்படைத்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் சாட்சி அரவிந்த் குமார் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். **எதிரி மனோஜ்குமாரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்படட பகுதி அ.சா.ஆ.4 மேற்படி ஒப்புதல் வாக்குமுலங்களின் சாட்சி கையெழுத்துக்கள் அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6.** மேற்படி சைலோ காரை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் என் முன்னிலையிலும் சாட்சி அரவிந்த் குமார் முன்னிலையிலும் கைப்பற்றினார். **மேற்படி மகஜர் அ.சா.ஆ.7.** மேற்படி **சைலோ கார் சா.பொ.12, கைப்பற்றப்பட்ட செல்போன் ச.பொ.13.** பின்னிட்டு எதிரி மனோஜ் என்கிற மனோஜ்குமார் மற்றும் விமல்குமாரை நாட்டுக்கல்பாளையத்திற்கு காவல் ஆய்வாளர் அழைத்து சென்றார். அங்கு எதிரி மனோஜ் என்பதற்கு வீட்டில் இருந்து கருப்பு கலர் பஜாஜ் டிஸ்கவர் பைக் ஒன்றை எடுத்துக் கொடுத்தார் ஒரு நீல நிற ஓப்போ செல்போன் ஒன்றைஎடுத்துக் கொடுத்தார். அதை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார் மேற்படி **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8. மேற்படி பஜாஜ் டிஸ்கவர் இருசக்கரவாகனம் ச.பொ.14, ஓபோ செல்போன் சா.பொ.15**, இளஞ்சிரார் விமல் ஒரு இருசக்கர வாகனம் ஒன்று மற்றும் போன் ஒன்றையும் எடுத்து ஆஜர் செய்தார் அதையும் ஆய்வாளர் கைப்பற்றினார். 02.09. 2021 ஆம் தேதி தாராபுரம் பொறுப்பு காவல் ஆய்வாளர் காலை சுமார் 8.30 மணிக்கு எனக்கு போன் மூலம் அழைத்து மேற்படி கொலை வழக்கு தொடர்பாக ஒரு எதிரியை விசாரணை செய்ய வேண்டி இருப்பதால் என்னை உடன் இருக்குமாறு கேட்டுக் கொண்டார்.

3. நான் சுமார் 8.45,9:00 மணிக்கு காவல் நிலையம் சென்ற நான் அங்கு சென்றபோது அங்கு தளவாய்பட்டிணம் கிராம நிர்வாக அலுவலர் கோபால்சாமி விஏஓ இருந்தார். அங்கு பாஸ்கர் என்கிற பன்னி பாஸ்கர், கே டி மணிகண்டன் ஆகியோர் இருந்தார்கள். ( சாட்சி இந்த வழக்கில் முன்னிலையாகி இருந்த 1–ம் எதிரி பாஸ்கர் என்கிற பன்னி பாஸ்கர் என்று அடையாளம் காட்டுகிறார்). மேற்படி எதிரி பாஸ்கர் என்ற பன்னி பாஸ்கர் குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளரிடம் கொடுத்தார். அதை ஆய்வாளர் பதிவு செய்து கொண்டார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவ இடத்திற்கு தன்னை அழைத்துச் சென்றால் சம்பவ இடத்தையும் வழக்கு பயன்படுத்திய ஆயுதத்தையும் அடையாளம் காட்டுவதாக சொன்னார். அதில் நானும் சாட்சி கோபால் சாமியும் சாட்சி கையெழுத்து செய்தோம் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9. பின்னிட்டு எதிரி கேடி மணிகண்டன் என்பவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தார். அதில் நானும் சாட்சி கோபால் சாமியும் சாட்சி கையெழுத்து செய்தோம் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10. காவல் ஆய்வாளர் எங்களையும் எதிரிகளையும் கூட்டிக்கொண்டு சம்பவ இடமான விவேகம் பள்ளிக்கு எதிர்ப்புறம் உள்ள முருகசாமி என்பவருக்கு சொந்தமான மனை இடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு ஒரு புதரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு பட்டாக்கத்தியை பாஸ்கர் என்கிற பண்ணி பாஸ்கர் ஆய்வாளரிடம் எடுத்துக் கொடுத்தார். மேற்படி பட்டாகத்தி சா.பொ.16. மேற்படி பட்டா கத்தியை ஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகஜரில் நானும் சாட்சி கோபால் சாமியும் சாட்சி கையெழுத்து போட்டோம். மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ,சா.ஆ 11. பின்னிட்டு கேடி மணிகண்டன் அதே புதரில் இருந்து ஒரு அருவாளை எடுத்துக் கொடுத்தார் அதை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் அருவாள் தான் அன்று கைப்பற்றப்பட்ட அருவாளாகும். மகஜர் அ.சா.ஆ.12 அருவாள் ச.பொ. 17. மேற்படி நிகழ் தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவ இடம் மற்றும் வழக்குப் பொருட்களை கைப்பற்றிய இடங்கள் யாருக்கு சொந்தமானது என்பதை நான் விசாரித்து ஆவணங்களை பார்த்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் இதற்கு முன்பு ஒரு வழக்கில் அரசு தரப்பு சாட்சியாக சாட்சியமளித்துள்ளேன். நான் ஆய்வாளர் குறிப்பிட்டு இடத்திற்குச் சென்றபோது அங்கு சைலோ கார் இருந்தது. மேற்படி சைலோ கார் யாருக்கு சொந்தமானது என்பது குறித்து காவல்துறையினர் அதன் பதிவு சான்றை பரிசோதித்தார்கள் என்றால் அது குறித்து என்னிடம் ஆய்வாளர் சொல்லவில்லை. மேற்படி சைலோ காரை யார் ஓட்டி வந்தார்கள் என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். இளஞ்சிரார் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தொடர்பாக நான் சாட்சியமளித்தேன். போலீசார் கைது செய்யததாக கூறப்படும பன்னிபாஸ்கர், மனோஜ் செல்வம், மணிகண்டன் ஆகியோர் தாராபுரத்தை சேர்ந்தவர்கள் அல்ல என்றால் சரிதான். நான் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையெழுத்து செய்யும் போது என் அலுவலகம் முத்திரையை வைக்கவில்லை.

2. பொதுவாக நான் அலுவலக பணியாக வெளியில் செல்லும்போது அலுவலகம் முத்திரையை கையில் எடுத்துச் செல்லும் வழக்கம் உண்டு என்று சொன்னால் சரிதான். கிராம நிர்வாக அலுவலரால் நாட்குறிப்பை பராமரிக்கும் விதி உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு விதி உள்ளது என்றாலும் கிராம நிர்வாக அலுவலர்கள் எங்கள் சங்கத்தின் சார்பாக போராட்டம் செய்து அதை பின்பற்றுவது இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி நாட்குறிப்பை நாங்கள் பராமரித்தால் எங்களுடைய தினசரி அலுவல்கள் மேலதிகாரிகளுக்கு தெரிந்து விடும் என்பதால் அதை வேண்டுமென்றே பராமரிக்க தவறி உள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. காவல் நிலையத்தில் மேற்படி விசாரணைக்கு உதவியாக இருக்க அழைக்கும்போது வட்டாட்சியரிடம் தகவல் சொல்லிவிட்டு தான் செல்ல வேண்டும் என்று சொன்னால் சரிதான்.

இந்த வழக்கில் நான் ஆய்வாளர் அழைத்த போது செல்வதற்கு முன்னால் வட்டாட்சியரிடம் தொலைபேசி மூலமாக தகவல் அளித்தேன். நான் அவ்வாறு வாய்மொழியாக வட்டாட்சியரிடம் தகவல் செல்ல முடியாது என்றாலும் உரிய வழியில் எழுத்து மூலமாக தகவல் கொடுத்துவிட்டு Movement Register ல் அது குறித்து பதிவு செய்துவிட்டு தான் செல்ல வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

3. இந்த வழக்கில் கையெழுத்து செய்துள்ள கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் எந்த இடத்திலும் என்னுடைய அலுவலக முத்திரை இல்லை என்றாலும் மேற்படி ஆவணங்களை போலீசார் மொத்தமாக தயாரித்து வைத்து நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஆய்வாளர்என்னை விசாரித்தபோது எதிரிகளை எவ்வளவு நேரம் விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்று குறிப்பாக நான் சொல்லவில்லை என்று சொன்னால் எனக்கு நேரம் நினைவில்லை. மேற்படி நேரத்தை குறிப்பிட்டு வாக்குமூலம் கொடுத்தால் இந்த வழக்கில் முரண்பாடுகள் ஏற்படும் என்பதால் அதை தவிர்ப்பதற்காக நேரத்தை வேண்டுமென்றே குறிப்பிடாமல் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஆய்வாளர் என்னை விசாரித்தபோது எத்தனை மணியிலிருந்து எத்தனை மணி வரை யாருடைய ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது எத்தனை மணியில் இருந்து எத்தனை மணி வரை வழக்கு பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்பது குறித்து குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. சம்பவம் நடந்த இடமாகச் சொல்லப்படும் விவேகம் பள்ளியின் எதிரில் உள்ள இடம் ஆனது அலங்கியம் கிராம எல்லைக்கு உட்பட்டதல்ல என்று சொன்னால் சரிதான். நாட்டுக்கல்பாளையம் தனி கிராமம் என்றாலும் அதுவும் என்னுடைய எல்லைக்கு உட்பட்டதல்ல என்றாலும் சரிதான். அப்போது அலங்கியம் கிராமத்திற்கு கிராம நிர்வாக அலுவலர் இல்லை. ஆய்வாளர் என்னை விசாரித்தபோது ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையெழுத்து செய்ய வேறு நபர்கள் வர மறுப்பதால் என்னை சாட்சியாக வரச் சொன்னதாக நான்

குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் காவல்துறையின் கையிருப்பு சாட்சி என்பதால் இது வழக்கில் சாட்சி கையெழுத்து போடுவதற்கு என்னை பயன்படுத்திக் கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்த விபரத்தை வட்டாட்சியரிடம் தனி அறிக்கையாக நான் சமர்ப்பித்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு தனி அறிக்கை சமர்ப்பிக்காமல் இருப்பதற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

5. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் மேற்கண்ட கையெழுத்துக்களை செய்யாததால் தான் அது குறித்து நான் என்னுடைய உயர் அதிகாரிக்கு அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி செல்போன்களின் IMEI ஏன் மற்றும் சிம் கார்டுகளின் IMSI எண் ஆகியவற்றை ஆய்வாளர் கைபற்றுதல் மகஜரில் குறிப்பிட்டுளளாரா என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். நாட்டுக்கல் பாளையத்தில் குறிப்பாக எந்த தெருவில் உள்ள வீட்டில் பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்று என்னுடைய ஆய்வாளர் விசாரணையில் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் அது எந்த தெரு என்று எனக்கு தெரியாது.அது ஓட்டு வீடு ஆகும். அது கிழக்கு பார்த்த வீடாகும். மேற்படி பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் வீட்டின் வரைபடத்தை ஆய்வாளர் வரைந்தாரா என்றால் அது எனக்கு தெரியவில்லை. ஆய்வாளர் கைப்பற்றிய இரண்டு இருசக்கர வாகனங்களும் அருகருகே நிறுத்தப்பட்டிருந்தன. மேற்படி இருசக்கரவாகனங்கள் தார்போய் போட்டு மூடப்பட்டிருந்ததா என்பது குறித்து ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. ஆய்வாளர் கைப்பற்றப்பட்ட பட்டாக்கத்தி மற்றும் அருவாளில் ரத்தக்கரை இருப்பதை குறித்து எழுதிக் கொண்டார். கைப்பற்றப்பட்ட கார் மற்றும் இருசக்கர வாகனங்களில் ரத்தக்கரை எதுவும் இல்லை. நான் இரவு 9 மணிக்கு கொங்கூர் பிரிவுக்கு சென்றேன். எவ்வளவு நேரமாக 8 மற்றும் 10 எதிரிகளை மேற்படி இடத்தில் நிறுத்தி வைத்திருந்தார்கள் என்று எனக்கு

தெரியாது என்றால் சரிதான். போலீசார் எதிரிகளை ஏற்கனவே பிடித்து விசாரித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு தகவல் தெரிவித்து அதற்குப் பிறகு எனக்கு தகவல் தெரிவித்தார்கள் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலங்கள் மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டன. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்யப்பட்டபோது இரவு நேரம் என்பதால் அங்கு கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன என்றால் சரிதான். போலீசார் விசாரணை போது மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் எங்கு பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல சொல்லியுள்ளேன். அலங்கியம் காவல் நிலையத்தில் சென்று பதிவிறக்கம் செய்து வந்தார்கள். மேற்படி சங்கதிகளை நான் ஆய்வாளர் விசாரணையின் போது சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

7. நான் சொன்ன நேரத்திலும் சொன்ன விதத்திலும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டு பதிவிறக்கம் செய்யப்படவில்லை என்பதால் தான் அது குறித்து என்னால் விளக்க முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. இரு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனத்தின் பதிவு சான்ளை போலீசார் என் முன்னால் சரிபார்த்தார்களா என்றால் இல்லை மேற்படி வாகனங்களின் என்ஜின் நம்பர் மற்றும் சேசிஸ் நம்பர் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிட்டுள்ளார்களா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி வாகனங்கள் நான் குறிப்பிட்ட இடத்தில் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றாலும் மேற்படி வாகனங்கள் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தன என்றாலும் அதை நான் மேற்படி இடத்தில் கைப்பற்றப்பட்டதாக தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

8. ஆய்வாளர் விசாரிக்க போது நான் கொங்கூர் பிரிவுக்கு எந்த எந்த வாகனத்தில் சென்றேன் என்றும் அங்கிருந்து நாட்டுக்கல்பாளையத்திற்கு எந்த வாகனத்தில் சென்றேன் என்றும் பின்னிட்டு நாட்டுக்கல்பாளையத்தில் இருந்து எந்த வாகனத்தில் வந்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் எந்த முறையில்

கொண்டுவரப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். நாட்டுக்கல்பாளையத்தில் உள்ள வீடு எதிரியின் வீடு தான் என்பதை போலீசார் யாரிடம் விசாரித்து உறுதி செய்து கொண்டார்கள் என்பதை நான் என்னுடைய ஆய்வாளர் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி வீட்டில் யார் யார் இருந்தார்கள் அவர்களை போலீசார் விசாரித்தார்களா என்பது குறித்தும் நான் ஆய்வாளர் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் சரிதான். கொங்கூருக்கு நாட்டுக்கல்பாளையத்திலிருந்து உடுமலைப்பேட்டை ரோட்டில் சென்று நாட்டுக்கல்பாளையத்திற்கு சென்றோம். இரண்டிற்கும் இடையில் சுமார் 18 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். நாட்டுக்கல்பாளையம் தான் தாராபுரம் மற்றும் உடுமலை தாலுகாவுக்கு எல்லை என்று சொன்னால் சரிதான். கொங்கூர் பிரிவிலிருந்து மேற்படி நாட்டுக்கல்பாளையம் 30 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் என்றாலும் நான் 18 கிலோமீட்டர் என்று பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

9. கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் சைலோ காரின் கலரை நான் போலீசார் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். போலீசார் பொருட்களை கைப்பற்றும் போது அங்கு பொதுமக்கள் வந்தார்கள். மேற்படி பொதுமக்களிடம் கைப்பற்றுதல் மகஜரில் கையெழுத்து போடச் சொல்லி ஆய்வாளர் கேட்டாரா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கைப்பற்றுதல் மகஜரில் மேற்படி இருசக்கர வாகனம் ஒளித்து வைக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். சா.பொ. 16 மற்றும் 17 ஆகியவை இந்த வழக்குக்காக தயார் செய்யப்பட்ட கத்திகள் என்றாலும் நான் குறிப்பிட்டது போல மேற்படி இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட கத்திகள் அல்ல என்று சொன்னாலும் சரியல்ல. கத்திகள் புதரில் புதைத்து வைக்கப்பட்டிருந்ததாக நான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான் புதரில் வைக்கப்பட்டிருந்தது. மேற்படி கத்திகள் வெட்ட வெளியில் கிடந்தது என்று சொன்னால் சரியல்லசெடிக்குள் இருந்தது. வெயில் பணி மற்றும் மழைபடும் இடத்தில் தான் கிடந்தது என்றால் சரிதான். அவ்வாறு வெயில் பணி மற்றும்

மழைபடும் இடத்தில் கத்தி கிடந்து இருந்தால் அதில் ரத்தக்கரை இருக்க வாய்ப்பில்லை என்றாலும் ரத்தக்கரை இருந்ததாக நான் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்ட அருவாள் மற்றும் கத்தியில் ரத்தக்கரை இருந்ததாக குறிப்பாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. கத்தி மற்றும் பட்டாக்கத்தில் குறிப்பான அடையாளங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நான் போலீசாருக்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.16 21:44:30 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.